செ.வெ.எண்: 48 நாள்: 30.12.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மைத்துறையின் சார்பில் இன்று (30.12.2016) நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று துவக்கிவைத்து பேசியதாவது:-

விவசாயிகள் குறைகளை மனுக்களாக பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வுகாண விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் பிரதி மாதம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் செம்மை நெல் சாகுபடிக்கு மானியம் வழங்க கோரியும், காய்கறி பயிர்களுக்கு பயிர்காப்பீடு செய்ய கோரியும், தானிய உலர்கலம் அமைக்க கோரியும், மரக்கன்று வளர்ப்பதற்கு பராமரிப்பு மானியம் வழங்க கோரியும் என வரப்பெற்ற 46 மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் மழையளவைப் பொறுத்த அளவில் டிசம்பர் 2016ம் மாதத்தில் இயல்பான மழையளவான 96.51 மி.மீக்கு, இதுவரை பெறப்பட்ட மழையளவு 51.20 மி.மீ ஆகும். நடப்பு 2016 ஆண்டுக்கு இம்மாதம் வரை பெறப்பட வேண்டிய இயல்பான மழையளவான 925.92 மி.மீக்கு இதுவரையில் பெறப்பட்ட மழையளவு 490.07 மி.மீ ஆகும். வடகிழக்கு பருவமழையினைப் பொறுத்த அளவில் இயல்பான மழை அளவான 501.78 மி.மீக்கு மாறாக இதுவரை 172.00 மி.மீ மழை மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளது. கல்லணை கால்வாய் பகுதியில் உள்ள 170 திட்ட குளங்களில், பாசன கால்வாய்களில் தண்ணீா் வரத்தின்மையாலும், 5281 மானாவாரி குளங்களில் போதிய மழையின்மையாலும் பாசனத்திற்கு தண்ணீர் இல்லாத நிலை உள்ளது.

நடப்பாண்டு நெல் 66426 எக்டர் பரப்பளவிலும், சிறுதானியங்கள் 2553 எக்டர் பரப்பளவிலும், பயறுவகை பயிர்கள் 2497 எக்டர் பரப்பளவிலும், எண்ணெய்வித்துப் பயிர்கள் 3974 எக்டர் பரப்பளவிலும், கரும்பு 4900 எக்டர் பரப்பளவிலும், தென்னை 9362 எக்டர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 33 வேளாண்மை விரிவாக்க மையங்களில் 232.185 மெ.டன் நெல் விதைகளும், 22.973 மெ.டன் பயறு விதைகளும், நிலக்கடலை 42.360 மெ.டன் தற்சமயம் இருப்பில் உள்ளது. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்களிலிருந்து பெற்று சாகுபடி செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. உரிமம் பெற்ற கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகள் கிடைக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தேவையான தரமான உரங்கள் தடையின்றி உரிய நேரத்தில் கிடைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது யூரியா 3911 மெ.டன்னும், டிஏபி 1040 மெ.டன்னும், பொட்டாஷ் 928 மெ.டன்னும், 1186 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வரப்படுகிறது.

PPFM (Pink Pigmented Faculative Methylo Troph) எனப்படும் மெத்தைலோ பாக்டீரியா நுண்ணுயிரி தெளிப்பதால் இந்த பாக்டீரியா இலைகளில் உள்ள பச்சையத்தை தக்க வைக்கும் எனவே, ஒளிச்சேர்க்கை முறையாக நடந்து பயிர்கள் இயல்பாக உயிர் வாழும். மேலும், இலைகளில் நீராவிப் போக்கினை ஏற்படுத்தும் எத்திலினை கட்டுப்படுத்தி நீராவிப்போக்கினை தடுக்கும். ஒரு ஏக்கருக்கு 200 மில்லி பி.பி.எப்.எம். பாக்டீரியாவை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். ஒரு லிட்டர் திரவ வடிவிலான பாக்டீரியாவின் விலை ரூ.300/- ஆகும். ஒரு வாரம் தண்ணீர் ஒரு வாரம் இந்த பாக்டீரியா கரைசல் என மாறிமாறி தெளித்துப் பயன்பெற வேண்டும். இந்த பி.பி.எப்.எம். 100% இயற்கை சார்ந்த பாக்டீரியா மூலமாகவோ உருவாக்கப்பட்டிருப்பதால் எந்த எதிர் விளைவுகளும் ஏற்படாது.

..2..

இந்த பாக்டீரியா தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிர் துறை, வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களின் மூலம் பெற்று பயன்படுத்தலாம். தற்சமயம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண்மை அறிவியல் நிலையம் வாயிலாக இலவசமாக பி.பி.எப்.எம். பெற்று விவசாயிகளுக்கு வழங்கி செயல் விளக்கங்களும் நடைபெற்று வருகிறது. செயல் விளக்கங்களில் திரளான விவசாயிகளும் உழவர் நண்பர்களும் பங்கேற்று வருகின்றனர்.

மாற்றுப்பயிர்த்திட்டம்: மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை இயல்பைவிடக் மிகக் குறைவாகவே கிடைக்கப் பெற்றுள்ளதால் விவசாயிகள் குறைந்த வயது மற்றும் குறைந்த நீர்த்தேவையுள்ள உளுந்து மற்றும் மக்காச்சோளப் பயிர்களை மாற்றுப் பயிர்களாக அதிகஅளவில் சாகுபடி செய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் பயறுவகைப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில் மகசூல் காரணிகளை அதிகரிக்கும் பயறு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி 170 எக்டர் பரப்பளவில் செயல்விளக்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு கந்தர்வக்கோட்டை, திருவரங்குளம், கறம்பக்குடி, அறந்தாங்கி, ஆவுடையார்கோவில் மற்றும் குன்றாண்டார்கோவில் வட்டாரங்களில் திட்ட செயலாக்கப்பணி துவக்கப்பட்டுள்ளது. செயல்விளக்கத்திற்குத் தேவையான உளுந்து விதைகள், நுண்ணுயிர் உரங்கள், 2 சதவீத டி.ஏ.பி கரைசல் தெளித்தல் போன்றவை எக்டர் ஒன்றுக்கு ரூ.5000/- மானிய மதிப்பில் வழங்கப்படவுள்ளது. இச்செயல்விளக்கங்களை விதைப் பண்ணைகளாகப் பதிவு செய்து விதை உற்பத்தி செய்து எதிர்வரும் பருவங்களுக்கு விவசாயிகளுக்கு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விதை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பங்கு பெற, விவசாயிகள் மேற்கண்ட வட்டாரங்களின் வேளாண் விரிவாக்க மையங்களைத் தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் 157200 ஏக்கர் நெல் பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள அனைத்து வருவாய் கிராமங்களுக்கும் பயிர் அறுவடை பரிசோதனை திடல்கள் 2800 எண்கள் இலக்கீடு பெறப்பட்டு அனைத்து வட்டாரங்களிலும், தற்போது பயிர் அறுவடை பரிசோதனை திடல்கள் தேர்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதர பயிர்களான மக்காச்சோளத்தில் 475 ஏக்கரும், பயறுவகை பயிர்களில் 77 ஏக்கரும், நிலக்கடலையில் 700 ஏக்கரும் மற்றும் கரும்பில் 1200 ஏக்கரும் பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. கரும்பு ரபி பருவத்திற்கு விதைப்பு பொய்த்து போதலின் கீழ் காப்பீட்டுத் தொகை செலுத்துவதற்கு 15.01.2017 காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்கள் அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கி கிளைகளை அணுகி ஏக்கருக்கு ரூ.540/- காப்பீட்டுத் தவணைத் தொகை செலுத்தி நிலம் தொடர்பான ஆவணங்களை (சிட்டா, அடங்கல், கிராம நிர்வாக அலுவலர் சான்று) செலுத்தி பயிர் காப்பீடு செய்து பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாவட்டத்தில் பயிர் காப்பீடு செய்துள்ள அனைத்து பயிர்களுக்கும் அரசு வழிகாட்டுதலுக்குட்பட்டு பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ள தொடர்புடைய பணிகள் வேளாண்மைத்துறை வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தோட்டக்கலைத்துறையின் சார்பில் விவசாயிகளுக்கு மானிய விலையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, வேளாண்மை இணை இயக்குநர் திரு.அண்ணாமலை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**